# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.188/2016** |
| Deposition of witness for | - P.W. 26 |
| Name | - Thiru.Vijayakumar |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of**17.08.2023**

**எதிரி ஆஜர்:**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து விருப்பு ஓய்வு பெற்றுவிட்டேன். 01.08.2015ம் தேதி சி3 எஸ்எஸ்காலனி காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் தயார் நிலைப்பணியில் இருக்கும்போது காலை 05.00 மணிக்கு காவல் ஆய்வாளர் சி3 எஸ்எஸ்காலனி சட்டம் ஒழுங்கு காவல் நிலைய குற்ற எண்.700-2015 பிரிவு 454, 380, 302 IPC வழக்கின் விரைவு முதல் தகவல் அறிக்கையும் வாதி கொடுத்த புகார் மனுவையும் கனம் நீதித்துறை நடுவர் எண்.5, அவர்களுக்கு கொடுத்து வர உத்தரவிட்டார். அந்த தபாலை பெற்று கணம் நீதித்துறை நடுவர் எண்.5 அவர்கள் குடியிருப்பு வந்து காலை 05.50 மணிக்கு அவரிடம் அந்த தபாலை கொடுத்து அதற்கு ஒப்புதல் பெற்று நிலையம் வந்து காவல் ஆய்வாளர்

அவர்களிடம் அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளா என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் கொண்டு போன விரைவு முதல் தகவல் அறிக்கை என்றால் அதனை உடனே கொண்டுபோய் சேர்க்கவேண்டும். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் பெற்றுக்கொண்டேன். நான் காவல் ஆய்வாளரிடமிருந்து தான் பெற்றுக்கொண்டேன். நான் காவல் நிலையத்தில் இருக்கும் போது புகார் தாரர் காவல் நிலையத்தில தான் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.